# இயேசுகிறிஸ்துவின் மனிதத்துவம் (பாடம்-3)

இயேசுவின் தேவத்துவத்தைப் பற்றி அறியத்தரும் வேதாகமம் அவருடைய மனிதத்துவத்தைப் பற்றியும் போதிக்கின்றன. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியம், தேவனான அவர் மனிதனாகவும் இருக்கிறார் என்பதேயாகும். எனினும் அவருடைய மனிதத்துவம் மனுவுருவாதலுக்குப் பிற்பட்ட நிலையேயாகும். அதற்கு முன் அவர் தேவனாக மட்டுமே இருந்தார். ஆனால் அதன்பின் அவர் மனிதனாகவும் இருக்கிறார். இயேசு கிறிஸ்து எவ்வாறு முழுமையாக தேவனாக இருந்தாரோ அதேபோல முழுமையான மனிதனாகவும் இருந்தார்.

அவர் மானிட சரீரத்தைக் கொண்டிருந்தார். மானிட தாயின் வயிற்றில் கருத்தரித்த அவர் மற்றைய மக்களைப் போலவே மாம்ச சரீரத்தை உடையவராய் இருந்தார்.

அவர் மற்றவர்களைப் போலவே பிறந்து வளர்ந்தார். (லூக் 2:52) அவருடைய வாழ்க்கை சாதாரண மனித வாழ்க்கை போலவே வளர்ச்சியுற்றது. மற்றவர்களைப் போலவே அவருடைய வளர்ச்சிக்கு ஆதாரம் தேவையாயிருந்தது.

மற்றவர்களுக்கு ஏற்படும் பசி (மத் 4:2) தாகம் (யோ 19:28) களைப்பு (யோ 4:6) துயரம் (மத் 26:37) கோபம் (மத் 10: 10-14, மாற் 3:5) சந்தோஷம் (யோ 15:11, 17:13) ஆச்சரியம் (லூக்கா 7:9, மாற்கு 6:6) இரக்கம் (மத்தேயு 9:36) அன்பு (மாற்கு 15:11) அழுகை (யோவான் 11:35,33,38) என்பன அவருக்கு ஏற்பட்டது.

சரீரப்பிரகாரமாக வேதனையடைந்து அவர் மரணத்தையும் சந்தித்தார். (யோவான் 19:34, மாற்கு 14:32-42, லூக்கா 12:50, யோவான் 12:27, மத்தேயு 26:37, லூக்கா 22:44, மாற்கு 15:14).

இயேசு கிறிஸ்து மனிதனாக இருந்தமையினாலேயே சீடர்களால் அவரைத் தங்கள் கண்களால் காணக்கூடியதாகவும், நோக்கிப் பார்க்கக் கூடியதாகவும், கைகளினால் தொட்டுப் பார்க்கக் கூடியதாகவும் இருந்தது (1 யோவான் 1:1)

இயேசு கிறிஸ்து மனிதனாக இந்த உலகில் இருந்தமையால் அவர் மனிதனைப் போல சில வரையறைகளுக்குட்பட்டவராகவும் இருந்தார். அவர் சகலமுமறிந்த தேவனாக இருந்த போதிலும் சில விஷயங்களை அவர் அறியாதவராகவே இருந்தார். இவற்றை அறிந்துகொள்வதற்காக அவர் மக்களிடம் கேள்விகள் கேட்டு அவற்றை அறிந்து கொண்டார். (மாற் 9:21) “விடையை அறிந்துக் கொள்வதற்காகவே அவர் கேள்வி கேட்க வேண்டியதாயிருந்தது” (Leon Morris) இயேசு கிறிஸ்து இதை அறியாதிருந்தமையினாலேயே கேட்டுத் தெரிந்துக் கொள்ள வேண்டியிருந்தது. (Erikson) அவருடைய அறிவு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததினாலேயே இரண்டாம் வருகையின் காலத்தையும் அறியாதவராக இருந்தார். (மாற்கு 13:32). “அவருடைய அறிவு வரையறைக்குட்பட்டிருந்தது என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது”. (Morris) அவர் மனிதனாக இருப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அறிவு அவசியமாகும்.

இயேசுவின் அறிவு ஒரு சிலவிஷயங்களில் முழுமையானதாகவும் எல்லை கடந்தும் இருக்கையில், வேறு சிலவிடயங்களில் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருப்பது, நமக்கு பிரச்சினையைத் தோற்றுவிக்கலாம். ஆனால், அவருடைய ஊழியத்துக்கு தேவையான அறிவு அவருக்கிருந்தது. அவசியமற்ற விஷயங்களை அறியும் அறிவு அவருக்கு இருக்கவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. (Leon Morris)

இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகளும் அவருடைய மனிதத்துவத்துக்கான ஆதாரமாகும். (லூக்கா 4:13, மத்தேயு 4:1-11) தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல (யாக் 1:13) இயேசு தேவனாக மட்டும் இருந்திருந்தால் பிசாசினால் அவரை சோதித்திருக்க முடியாது. நம்மைப் போலவே அவர் சோதிக்கப்பட்டார். (எபி 2:17-18, 4:5) "அவர் நம்மைப்போல சோதிக்கப்பட்டார் என்பது அவர் நம்மைப்போல் மனிதனாக இருந்தார் என்பதற்கான ஆதாரமாயமைகிறது." (Morris) சரீரப்பிரகாரமான ஆசைகள் விருப்புகள் இல்லாத நிலையில் ஒரு மனிதன் சோதனைக்குட்பட முடியாது. இயேசு சோதிக்கப்பட்டது அவர் நம்மைப் போன்ற மாம்சத்தை உடையவராக இருந்தார் என்பதையே புலப்படுத்துகிறது.

இயேசு கிறிஸ்து மனிதனாக இருந்தபடியால் அவர் ஜெபித்தார் (மாற்கு 1:35, 6:46, லூக்கா 3:21, லூக்கா 6:12) "அவருடைய ஜெப வாழ்வு அறியத் தருகிறது" அத்தோடு அவர் ஆலயத்துக்கு சென்று அதின் வழிபாடுகளிலும் கலந்துகொண்டார் (லூக்கா 4:16). இயேவினுடைய எதிரிகள்கூட, அவர் தேவனை நம்பி வாழ்ந்த ஒரு மனிதன் என அறிக்கையிட்டனர். (மத்தேயு 27:43)

எல்லாவற்றுக்கும் மேலாக இயேசுவே தன்னை மனிதன் என கூறியுள்ளார். பிசாசு தன்னை சோதித்தபோது "மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல எனும் வசனத்தைத் தனக்கு உபயோகித்தார். (மத்தேயு 4:4) அத்தோடு யோவான் 8:40ல் "தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை இயேசுவின் அப்போஸ்தலர்களும் அவர் மனிதன் என்பதை அறியத் தந்துள்ளனர். நசரேயனாகிய இயேசு என அவர்கள் மத்தியல் வாழ்ந்த நாசரேத்தூரைச் சேர்ந்த மனிதனாகிய இயேசுவையே ஆதி அப்போஸ்தலர் குறிப்பிட்டனர்" (அப் 3:6, 6:14, 10:38, 22:8, 26:9)

இயேசுவின் மனிதத்துவத்தைப் பற்றி பவுல் "மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவர் (ரோமர் 1:5) மாம்சத்தின்படி கிறிஸ்து இஸ்ரவேலரிடத்தில் பிறந்தார் (9:5). ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர் (கலா 4:5) என குறிப்பிட்டுள்ளதோடு, யாக்கோபை கர்த்தரின் சகோதரர் என்றும் அறிமுகப்படுத்தியுள்ளார் (கலா 1:19). இயேசுவின் ஏழ்மையான பூவுலக வாழ்வு பற்றியும் அவர் எழுதியுள்ளார் (2 கொரி 8:9). இயேசு மனிதன் என்பதைப் பவுல் இயேசு கிறிஸ்து என்றும் ஒரே மனுஷனுடைய கிருபை (ரோமர் 5:15), மனுஷனாகிய இயேசுகிறிஸ்து (1 தீமோ 2:6), மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று (1 கொரி 15:21), பாவ மாம்சத்தின் சாயலாய் அவர் வந்தார் (ரோமர் 8:3), அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார் (பிலி 2:7) என்று அறியத்தந்துள்ளார்.

எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்திலும் இயேசுவின் மனிதத்துவத்துக்கான பல ஆதாரங்களை நாம் காணலாம். "மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு" (2:9) மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் (2:14) சோதிக்கப்பட்டார் (2:18) எல்லா விதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டார் (4:15) மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து பயபக்தியுடையவராயிருந்து பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் (5:7-8). அவருடைய சரீரம் பலியிடப்பட்டது" (10:10,20)

1 பேதுரு 2:24, 2:21, 3:18, 4:13 ஐயும் பார்க்க

தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் (1 தீமோ 3:16). தெய்வீக வார்த்தையான அவர் மாம்சமாகி வந்தார். (யோவான் 1:14) மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்கை பண்ணாத ஆவி தேவனால்

உண்டானதல்ல. (1 யோவான் 4:2-3, 2 யோவான் 7) அவர் இந்த உலகத்துக்கு வரும்போது அவருக்காக ஒரு மனுஷ சரீரம் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. (எபி 10:5). அவர் ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனிதராய் இருக்கிறார். (கலா 4:4) பாவம் செய்யாதவன் உண்மையான மனிதத்தன்மையை உடையவன் அல்ல என்று நாம் கூறினால், மானிட தன்மையின் ஒரு அம்சம் பாவம் என நாம் கூறுகிறோம்.

மனிதன் தேவனால் படைக்கப்பட்டவனாதலால், அவனைத் தேவன் பாவியாக படைத்தார் என கூறினால் தேவன் பாவத்துக்குக் காரணமாகவும், பாவமுள்ளவராகவும் இருக்க வேண்டும். உண்மையில் பாவம் மனிதத்தன்மையின் ஒரு அம்சம் அல்ல. இயேசு நம்மைப்போல் மனிதனா? எனக் கேட்பதை விட நாம் இயேசுவைப் போல மனிதனாக இருக்கின்றோமா? என்பதை நாம் கேட்க வேண்டிய கேள்வியாயுள்ளது. இயேசு நம்மைப்போல மனிதனாகப் பிறந்து வளர்ந்தும் பாவமற்றவராக, ஆதாமின் பாவ சுபாவத்தை சுவீகரிக்காதவராக இருக்கக் காரணம், அவருடைய கன்னிப்பிறப்பேயாகும். அவர் பரிசுத்த ஆவியானவரால் கருத்தரித்தமையால் பாவமற்றவராக இருந்தார்.

இயேசுவின் மனிதத்துவம் : சில நடைமுறை சத்தியங்கள்

இயேசுவின் முழுமையான மனிதத்துவம் கிறிஸ்தவ வாழ்விலும் அதிக செல்வாக்கு செலுத்துவதாயுள்ளது.

1. இயேசுவின் பிராயச்சித்தப்பலி நமக்குக் கிடைத்துள்ளது. நமக்காக, நம்மைப் பிரதி நிதித்துவம் வகித்து நமக்குப் பிரதியீடாத் தன்னையே இயேசு பலியாக்கியுள்ளார். அவர் மனிதனாக வந்திராவிட்டால் மனிதர்களாகிய நமக்காக பிராயச் சித்தப்பலியாகி இருக்க முடியாது.
2. இயேசு நம் மன உணர்வுகளை வேதனைகளை உண்மையாகவே புரிந்து கொண்டு, நமக்காக பிதாவிடம் பரிந்து பேசக்கூடியவராய் இருக்கிறார். நம் பிரச்சனைகள் அனைத்தையும் அனுபவரீதியாக கண்டவர் அவர்.
3. இயேசு உண்மையான மனிதத்துவத்தை வெளிப்படுத்தினார். நாம் மற்ற மனிதர்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்த்து நம்மைத் திருத்தாமல், இயேசுவுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்த்து நம்மைத் திருத்திக் கொள்ளக்கூடியதாக உள்ளது.
4. கிறிஸ்தவ வாழ்வின் உதாரணமாக, நமது மனித வாழ்வின் மாதிரியாக அவர் இருக்கிறார்.
5. மானிட தன்மை தீமையானதல்ல, மானிட ஆசைகள் பாவம் என கருதி துறவற வாழ்வை மேற்கொள்வது சரியானமுறை அல்ல. அதேபோல மாம்சத்தில் மனிதனாக இருப்பது தீமையான காரியமும் அல்ல.

இயேசு கிறிஸ்துவின் இருதன்மைகள்

இயேசுகிறிஸ்து தேவனாகவும் மனிதனாகவும், அதாவது முழுமையான தேவத்துவத்தையும் முழுமையான மனிதத்துவத்தையும் உடைய தேவமனிதனாக இருக்கிறார் என்பது நாம் இதுவரையும் கற்ற அவரது இருதன்மைகளிலிருந்தும் நாம் கண்டுகொள்ளும் விஷயமாகும். எனினும் அவர் எப்படி இருதன்மைகளையும் கொண்ட ஒரு நபராக இருக்க முடியும்? இருதன்மைகளும் முழுமையாக ஒரு நபரில் இருப்பது இறையியலில் மிகவும் சிரமமானதும், சிக்கலானதுமான போதனையாகும். இரு தன்மையினதும் உறவுமுறை, இணைந்திருக்கும் முறை என்பன மனிதனுடைய அறிவுக்கு எட்டாத தெய்வீக இரகசியம் என்பதனை மறுப்பதற்கில்லை.

இருதன்மைகளும் ஒரு நபரில் இருப்பது பல தீர்வு காண முடியாத சிக்கல்களை நமக்கு தோற்றுவித்துள்ளது. முழுமையான தெய்வமும் முழுமையான மனிதனும் ஒரு நபரில் இருப்பது சாத்தியமற்றது என்றே நம் மனம் எண்ணும். இயேசு இறைவனாயின் எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும். அவர் மனிதனானால் அவரது அறிவு வரையறைக்குட் பட்டதாய் இருக்க வேண்டும். அதே போல் அவர் இறைவனானால் எங்குமிருக்க வேண்டும். மனிதனாயின் ஓரிடத்தில் மட்டுமே இருக்க வேண்டும். இவ்வாறு முற்றிலும் முரணான தன்மைகளிரண்டும் ஒரு நபரில் இருந்ததென்பதை நம் அறிவைக் கொண்டு கிரகிப்பது சிரமமான விடயமாயினும் உண்மை இதுவேயாகும்.

இயேசுவுக்கு இரு தன்மைகள் இருந்தபோதிலும் அவர் ஒரு நபராகவே இருக்கிறார். (ரோமர் 1:3-5, கலா4:4-5, பிலி 2:6-11 இருதன்மைகளும் ஒன்றாக இணைந்துள்ளது. யோ 1:14, ரோமர் 8:3, 1 தீமோ 3:16, எபி 2:2,11-14, 1 யோ4:2-3). இயேசு இருதன்மையுடையவராய் இருந்தமையால், சில இடங்களில் ஒரு தன்மைக்கு மற்ற தன்மையின் செயல் கொடுக்கப்பட்டுள்ளதை அறிந்துக் கொள்ளலாம். (அப் 20:28, 1 கொரி 2:8, 1 யோ 2:1-2). அவருடைய மானிட செயலின்போது தெய்வீக பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. (1 கொரி 2:8, கொலோ 1:13,14)

இயேசு இருதன்மைகளை உடையவராக இருந்தபோதிலும், அவரில் இருநபர்கள் இருந்ததாக வேதம் கூறவில்லை. திரித்துவ நபர்கள் பன்மையில் பேசியதுபோல் இருதன்மைகளோடிருந்த இயேசு ஒருபோதும் பன்மையில் பேசவேயில்லை. எனவே ஒரு நபரே இருதன்மைகளையுடையவராய் இருந்தார் என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாயுள்ளது.

இருதன்மைகளும் இறையியலும்

இயேசுவின் இருதன்மை இறையியலில் பெரும் சிக்கலையும், பலகள்ளப் போதகங்களையும் உருவாக்கியுள்ளன. எனினும் “சிக்கல்களுக்கு மத்தியிலும் பரிசுத்தாவியானவர் சபையை சரியான சத்தியத்தில் வழிநடத்தியுள்ளார்.”

இயேசுவின் இருதன்மைகளைப் பற்றி ஆதிசபை அதிகளவு ஆராய முற்படவில்லை. ஆனால் சிலர் அவரது தேவத்துவத்தை மறுதலித்தனர். வேறுசிலர் அவருடைய மனிதத்துவத்தை மறுதலித்தனர். யூதமார்க்கத்திலிருந்து வந்த ஒரு குழு இயேசுவின் தேவத்துவத்தை மறுதலித்தது. இதிலிருந்து வந்த உபதேசம் எபியனிசம் என அழைக்கப்படுகின்றது. இயேசுவின் கன்னிப்பிறப்பை மறுதலித்த இந்த உபதேசம் யோசேப்பின் மகனாகிய இயேசு தெய்வமல்ல, மாறாக, ஞானஸ்நானத்தின் போது அவருக்குக் கிடைத்த தெய்வீக நிலை, உலக வாழ்வு முடிவதற்கு சற்று முன்பாக அவரை விட்டுப்போய்விட்டதெனப் போதித்தனர். அதே போல் டொசடிசம் எனும் உபதேசம், இயேசு உண்மையான மனிதனல்ல, அவர் மனிதனைப் போல தோற்றமளித்தவர் எனப்போதித்து, அவருடைய உண்மையான மனிதத்துவத்தை மறுதலித்தது.

நான்காம் நூற்றாண்டில் ஏரியஸ் (Arius) இன் உபதேசம் இயேசு பிதாவை விட தாழ்வானவர், பிதாவின் தன்மையற்றவர் எனப் போதித்தது. ஏரியனசம் (Arianism) இயேசுவின் தேவதன்மையை நிராகரித்தது. இவ்வுபதேசம் கிபி 325ல் நைசீயாவில் கூடிய ஆலோசனை சங்கத்தில் கள்ளப்போதகமாக கணிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டாலும் கூட இதனது செல்வாக்கு தொடர்ந்து இருந்தது. இன்று இது யெகோவாவின் சாட்சிகள் எனும் பெயரில் வந்துள்ளது. ஏரியஸ் இயேசுகிறிஸ்து பிதாவினால் சிருஷ்டிக்கப்பட்டவர் என போதித்தார்.

இக்காலகட்டத்தில் உருவான இன்னுமோர் கள்ளப்போதகமான அப்போலிநேரியனிசம் இயேசுவுக்கு தெய்வீக ஆத்துமாவும் மானிட சரீரமும் இருந்தது எனப்போதித்து, இயேசுவுக்கு மானிட சரீரமும் இருந்தது எனப் போதித்து, இயேசுவுக்கு மானிட ஆத்துமா இல்லை என்பதே இவரது கருத்தாயிருந்தது. முழுமையான மனிதத்தன்மைக்கு மறுதலித்த இவ்வுபதேசம் 381ல் கொன்ஸ்டன்டி நோபிலில் கூடிய ஆலோசனை சங்கத்தால் கண்டனத்துக்குள்ளாகி நிராகரிக்கப்பட்டது.

இயேசுவின் இருதன்மைகளைப் பற்றிய இன்னுமொரு கள்ளப்போதகம் நெஸ்டோரியனிசம் ஆகும். இவ்வுபதேசத்தின்படி இயேசுவில் இருநபர்கள் இருந்தார்கள். அதாவது அவர் இரு தன்மைகளைக் கொண்ட ஒரு நபரல்ல. தெய்வீக மானிட நபர்கள் இருவர் அவரில் இருந்தனர். மானிட கிறிஸ்து தேவனல்ல. மாறாக தேவனை சுமந்தார். அதாவது அவரில் தேவன் வாழ்ந்தார். தேவ மனிதனான இயேசுவை இவ்வுபதேசம் இரண்டாகப் பிரித்து இரு நபர்களாக்கியுள்ளது. கிபி 431ல் எபேசுவில் கூடிய சங்கத்தில் இவ்வுபதேசம் கண்டனத்துக்குக்குள்ளாகியது.

இதற்குப் பின் கிறிஸ்துவின் இருதன்மைகளைப் பற்றி உருவான கள்ள உபதேசம் இயூட்டிகியனிசம் (Eutychianism) ஆகும். அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த இயூட்டிகியஸ் எனும் துறவி, இயேசுவின் இரண்டு தன்மைகளும் ஒன்றாகக் கலந்து ஒரு தெய்வீக சாரமாகியது எனப் போதித்தார். இவரது உபதேசம் இயேசுவின் மனிதத் தன்மையை மறுதலிப்பதாயிருந்தது. இவ்வுபதேசம் அநேகரது கண்டனத்துக்குள்ளாகியதோடு, 451ல் கூடிய சால்சிடோன் சங்கத்தில் (Council of Chalcedon) நிராகரிக்கப்பட்டது.

இயேசுவின் இரு தன்மைகளைப் பொறுத்தவரை சால்சிடோன் ஆலோசனை சங்கம் மிகவும் முக்கியமானது. நைசீய விசுவாசப் பிரமாணத்தை உறுதிப்படுத்திய இச்சங்கம், இன்றுவரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும், வேதாகம விளக்கத்தின்படியான விசுவாச அறிக்கையை சேர்த்துக் கொண்டது. "இயேசுவின் இருதன்மைகளும் எவ்வித குழப்பமும் (Without Confusion), எவ்வித மாற்றமும் (Without Change), எவ்வித பிரிவும் (Without Division) வெவ்வேறாகவுமின்றி (Without Seperation) உள்ளது. இருதன்மைகளினதும் இணைவானது, எவ்விதத்திலும் ஒன்றின் தன்மையிலிருந்து எதுவும் எடுபட்டுவிடவில்லை. மாறாக, இரு தன்மைகளும், அவற்றுக்குரிய சகலவற்றையும் ஒரு நபரில் கொண்டிருந்தது. எவ்விதத்திலும் நபரில் எவ்வித பிரிவும் ஏற்படவில்லை என்பதே உறுதிப்படுத்தப்பட்ட விசுவாச அறிக்கையாகும்.

சால்சிடோனின் விசுவாசப் பிரமாணம் இயேசுவின் இருதன்மைகளும் எப்படிப்பட்டதாக இருக்கவில்லை என்றே அறிவித்தது. இவை அக்கால கள்ளப் போதகர்களின் கூற்றுக்களுக்கான மறுப்புரையாக இருக்கின்றதே தவிர ஒரு நபரில் இருதன்மைகளும் எப்படி இருந்தன என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இதனால் இருதன்மைகளுக்கிடையேயான உறவுபற்றி தொடர்ந்தும் குழப்பநிலை நிலவியது. இதனால் சால்சிடோன் விசுவாசப்பிரமாணத்திற்குப் பின்பும் இயேசுவின் இருதன்மைகளைப் பற்றி விளக்க சில போதகங்கள் தோன்றின. சால்சிடோனுக்குப் பின் இயேசுவின் இருதன்மைகளைப் பற்றி விளக்க "அடோப்சனிசம்" (Adoptionism)எனும் போதகம் தோன்றியது. சாதாரண ஒரு மனிதரான நாசரேத்தூரைச் சேர்ந்த இயேசுவை அவருடைய ஞானஸ்நானத்தின் போது தேவன் தன் குமாரனாக சுவீகரித்தார். இச்சமயத்தில் தேவாவியானவர் இவர்மீது வந்தமையினால் மனிதனான இயேசுவில் தேவன் வந்தார் என இப்போதகம் போதிக்கின்றது. இது இயேசுவின் மானிட அவதாரத்துக்கு முன்னுள்ள நிலையையும் கன்னிப் பிறப்பையும் மறுதலிக்கின்றது.

இயேசுவின் இருதன்மைகளைப் பற்றி விளக்க தோன்றிய இன்னுமொரு போதகம், “அன்ஹுப்போஸ்ட்டடிக்” கிறிஸ்டோலஜி (Anhypostatic Christology)ஆகும். இதன்படி இயேசுவின் மனிதத்தன்மை ஆள்தத்துவ மீன்றியும் தனித்தும் இருப்பதும் அல்ல, தெய்வீக வார்த்தையானது ஒரு நபரோடு இணைந்திருக்கவில்லை என்பதாகும். இப்போதனை இயேசுவின் மானிட ஆள்தத்துவத்தை மறுதலிக்கிறது.

19ம் நூற்றாண்டில் இயேசுவின் இருதன்மைகளுக்குமிடையே உள்ள உறவைப் பற்றிய சிக்கலைத் தீர்க்க கெனொடிசிசம் (Kenoticism) எனும் போதனை பிலிப்பியர் 2:7 ஐ அடிப்படையாய்க் கொண்டு உருவானது. இயேசு தன்னைத்தானே வெறுமையாக்கினார் என்பது அவர் தன்னுடைய தெய்வீகத் தன்மைகளைத் துறந்து மனிதனாக வந்தார் என்பதே இப்போதனையின் கருத்தாகும். இது இயேசு இருதன்மைகளையும் உடையவராக இவ்வுலகில் இருந்தார் என்பதை மறுதலிக்கின்றது.

இயேசுவின் இரு தன்மைகளும் வேதாகம சத்தியமும்

பிலிப்பியர் 2:6-7, கொலோசேயர் 2:9 உடன் தொடர்புப்படுத்தப்பட்ட நிலையிலேயே விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும். இதன் அடிப்படையில் இயேசுவின் மானிட சரீரம் தேவத்தன்மை அற்ற நிலையில் இருக்கவில்லை என்பதை அறிந்திடலாம். எனவே அவர் தேவத்தன்மையை துறக்கவில்லை என்பது புலனாகிறது. “இயேசு மனிதனாக வந்தமை தெய்வீகத்தன்மைகளை துறப்பதன்படியல்ல, மானிட தன்மைகளை சேர்ப்பதை அடிப்படையாய்க் கொண்டது”. பிலிப்பியர் 2:6-7 ன் படி, இயேசு வெறுமையாக்கியது தேவனோடு சமமாயிருக்கும் நிலையையேயாகும். அந்நிலையைத் துறந்து அடிமையின் ரூபமெடுத்து இவ்வுலகத்திற்கு வந்தார். “இவ்வசனம் இயேசு எதை வெறுமையாக்கினார் என கூறாதமையினால் ‘அடிமையின் ரூபம்’, ‘தேவனுக்கு சமமாயிருப்பதை’ முரண்படுத்துவதாயுள்ளதை அறிந்துகொள்ளலாம். எனவே இயேசு தேவ தன்மையை அல்ல, தேவனுக்கு சமமாயிருப்பதையே வெறுமையாக்கினார் என்பது தெளிவு” அடிமையின் ரூபமெடுத்தது தேவதன்மையைத் துறந்ததைக் கொண்டிருக்கவில்லை. இயேசு தேவதன்மைகளைத் துறக்காமல், மனிதத்தன்மையை தன்னோடு சேர்த்துக்கொண்டு தேவ மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்தார்.

இருதன்மைகளின் இணைவானது, இருதன்மைகளும் தனித்து இயங்கவில்லை. எப்போதும் ஒன்றாகவே இயங்கியது என்பதையும் அறியத்தருகிறது. இயேசு சில சமயங்களில் தன்னுடைய தேவத்தன்மையையும் மற்ற சமயங்களில் மனிதத்தன்மையையும் இயங்கவில்லை. இருதன்மைகளும் ஒன்றாக செயற்பட்டன. இயேசுவின் மானிட தன்மை அவரது தெய்வீகத்தன்மையில் ஏற்படுத்திய வரையறைகளை விளங்கிக் கொள்ள இது நமக்கு உதவுகிறது. அதாவது இயேசு சகல இடங்களிலும் இருக்கக்கூடியவராக இருந்தும் ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு செல்லவேண்டியவராயிருந்தார். அதேபோல் எல்லாவற்றையும் அறியக்கூடியவரான அவர் சிலவற்றை அறியாதவராகவும் இருந்தார். “இது தெய்வீகத் தன்மையில் மானிட தன்மை ஏற்படுத்திய செயல் நிலையிலான வரையறையாகும்”. எனினும் இது தேவவல்லமை இயல்திறமை என்பவை குறைவடைந்ததாக அல்ல மாறாக சந்தர்ப்பம் ஏற்படுத்திய வரையறையாகவே கருதப்பட வேண்டும். வல்லமை நீக்கப்படவில்லை. ஆனால், நிலைமை அதை வரையறைக்குட்படுத்தியுள்ளது எனினும் இந்த வரையறை இயேசுவின் மீது பலாத்காரமாக தினிக்கப்படவில்லை மாறாக அவரே இதை விரும்பி ஏற்றுக்கொண்டார்.

இயேசு கிறிஸ்து முழுமையான தேவனாகவும் முழுமையான மனிதனாகவும் இருக்கிறார். இருதன்மைகளும் ஒரு நபரில் இணைந்திருந்தன. எனவே அவர் தேவ மனிதனாக இருக்கிறார்.

கேள்விகள்

1. இயேசு கிறிஸ்துவின் மனிதத்தன்மைக்குறித்து நாம் அறிந்துகொள்வதற்காக இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள வசன ஆதாரங்களை குறிப்பிடுக?
2. இயேசு கிறிஸ்துவின் மனித தன்மையினால் நம்முடைய வாழ்விற்கு கிடைக்கப்படுகிற ஆசீர்வாதங்கள் என்னென்ன என்பதை இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளிலிருந்து கூறுக?
3. இயேசு கிறிஸ்து எப்படி இருதன்மைகளையுடைய ஒரே நபராக இருந்தார் என்றும், ஒரே சமயத்தில், செயலில் கிறிஸ்துவின் ஒருதன்மை வெளிப்படுத்தபட்டதையும் பெயரில் கிறிஸ்துவின் மற்றொரு தன்மை வெளிப்படுத்தப்பட்டதையும் வசன ஆதாரத்துடன் கூறுக?
4. இயேசு கிறிஸ்துவின் இருதன்மைகளுக்கு விரோதமாக எழும்பின பல்வேறு உபதேசங்களைக் குறித்தும், அவைகள் எவ்வாறு நிராகரிக்கப்பட்டன என்பதைக் குறித்தும் விளக்கமாக கூறுக?
5. இயேசு கிறிஸ்துவின் இருதன்மைகளைக் குறித்து நாம் சரியான விசுவாசமுடையவர்களாய் காணப்பட இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள வேதாகம சத்தியங்களைவ சன ஆதாரத்துடன் விளக்குக?